**கவனிக்க.-** *2021.09.10 ஆந் திகதிய 2245 ஆம் இலக்க வர்த்தமானப் பத்திரிகையின் பகுதி II, பகுதி IV(அ) மற்றும் பகுதி IV(ஆ) பிரசுரிக்கப்படவில்லை.*

# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை


අංක 2246 - 2021 සැප්තැම්බර් මස 17 වැනි සිකුරාදා - 2021.09.17

*2246 ஆம் இலக்கம் - 2021 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 17 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


# பகுதி IV (ஆ) - உள்ளூராட்சி


| | பக்கம் |
|---|---|
| பதவிகள் - வெற்றிடம் | - |
| பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும் | - |
| கேள்விப்பத்திர அறிவித்தல்கள் | - |
| பொருட்கள் விற்பனையும் பிறவும் | - |
| உள்ளூராட்சி அறிவித்தல்கள் | *1154* |
| துணைவிதிகள் | - |
| உள்ளூர் அதிகாரசபைகள் தேர்தல்கள் | |
| கட்டளைச் சட்ட அறிவித்தல்கள் | - |
| வரவு செலவுத் திரட்டுகள் | - |
| வரவு செலவுக் கூற்றுகள் | - |
| ஆதன விற்பனைகள் | - |
| ஆயவிற்பனையும் குத்தகையும் | - |
| வீதிச் செயற்குழுவின் அறிவித்தல்கள் | - |
| நானாவித அறிவித்தல்கள் | *1155* |


**கவனிக்க.-** (i) இளந்தவறாளர்கள் (பயிற்சிப் பாடசாலைகள்) (திருத்தம்) சட்டமூலம் 2021, செத்தெம்பர் மாதம் 10 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகையின் பகுதி II இற்கு குறைநிரப்பியாக வெளியிடப்படுகின்றது.

(ii) தண்டனைச் சட்டக்கோவை (திருத்தம்) சட்டமூலம் 2021, செத்தெம்பர் மாதம் 10 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகையின் பகுதி II இற்கு குறைநிரப்பியாக வெளியிடப்படுகின்றது.

## வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான

## முக்கிய அறிவித்தல்கள்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.

வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை **வர்த்தமானியில் பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்.** இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பிவைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.

வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு **இரண்டு வாரங்களுக்கு முன்னர்,** அதாவது 2021, ஒற்றோபர் மாதம் 08 ஆந் திகதி வெள்ளிக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2021, செத்தெம்பர் மாதம் 24 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.

**2006 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, இலத்திரனியல் கொடுக்கல் வாங்கல் சட்டத்தின் 9 ஆம் பிரிவு**

"ஏதேனும் பிரகடனம், விதி, ஒழுங்கு விதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் வர்த்தமானியில் வெளியிடப்பட வேண்டுமென ஏதேனும் சட்டம் அல்லது சட்டவாக்கம் ஏற்பாடு செய்யுமிடத்து, அப்போது, அத்தகைய விதி, ஒழுங்குவிதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் இலத்திரன் வடிவத்தில் வெளியிடப்படின், அத்தகைய தேவைப்பாடு திருப்திப்படுத்தப்பட்டுள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்."

**கங்கானி லியனகே,**
*அரசாங்க அழுத்தகர்.*

*அரசாங்க அச்சுத் திணைக்களம்,*
*கொழும்பு 8,*
*2021 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதி.*

இவ்வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.


1153 - B82270 - 5403 (2021/08)

# உள்ளூராட்சி அறிவித்தல்கள்

## பதுளை மாநகர சபை

*1947 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க நகர சபை கட்டளைச் சட்டத்தின் 48(1) பிரிவின் கீழ் மேற்கொள்ளப்படும் அறிவித்தல்*

*1947 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க மாநகர சபை கட்டளைச் சட்டத்தின் 48 (1) ஆவது உப பிரிவின் படி ஊவா மாகாணத்தின், பதுளை மாவட்டத்தில் இதன் கீழ்க் காட்டப்படும் அட்டவணையில் குறிப்பிட்டுள்ள வீதிகள் பதுளை மாநகர சபையின் மூலம் பொதுப் பயன்பாட்டிற்கு தன்னகப்படுத்தலுக்கு 2020.11.05 ஆந் திகதி ஈ 05 ஐ கொண்ட சபை அனுமதிக்கிணங்க தீர்மானம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.*

*நகர ஆணையாளர்,*
*மாநகர சபை,*
*பதுளை.*

*மாநகர சபை அலுவலகம்,*
*பதுளை,*
*2021, ஓகத்து 18.*

### தீர்மானம்

*2021, மாச்சு 12 ஆந் திகதி வர்த்தமானி அறிவித்தலில் வெளியிட்டு வைக்கப்பட்டுள்ளதற்கிணங்க அதன் கால எல்லையினுள் அறிவித்தலுக்கிணங்க ஆட்சேபனைகள் ஏதும் இல்லை என்கின்ற படியால் இவ்வர்த்தமானி அறிவித்தல் மூலம் வெளியிட்டு வைக்கப்பட்டுள்ளதற்கிணங்க இதன் அட்டவணையில் காட்டப்பட்டுள்ள வீதிகள் பதுளை மாநகர சபைக்கு சொந்தமான வீதிகள் என ஏற்றுக்கொள்ளப்பட்டு பரிபாலனம் மேற்கொள்ளப்படும் என்பதை இத்தால் அறிவிக்கப்படுகின்றது.*

### அட்டவணை

| தொ. இல. | வீதியின் பெயர் | தொடங்கும் இடம் | முடிவடையும் இடம் | இடதுபக்க வரிப்பண இலக்கம் | வலது பக்க வரிப்பண இலக்கம் | நீளம் மீற்றர் | அகலம் மீற்றர் |
|---|---|---|---|---|---|---|---|
| | | (கெட்டவளை பிரதான வீதியிலிருந்து கெட்டவளை ஒழுங்கு வீதி நோக்கி) | (கெட்டவளை பிரதான வீதியிலிருந்து கெட்டவளை ஒழுங்கு வீதி நோக்கி) | (கெட்டவளை பிரதான வீதியிலிருந்து கெட்டவளை ஒழுங்கு வீதி நோக்கி) | (கெட்டவளை பிரதான வீதியிலிருந்து கெட்டவளை ஒழுங்கு வீதி நோக்கி) | | |
| 01 | பதுளை பண்டாரவளை கெட்டவளை ஒழுங்கு வீதி | **இடது** கே. எம். ஏ. ரென்டோல் அவர்களின் வீட்டின் அருகில் வரிப்பண இல. 28 | **இடது** பியசிறி விதாரண அவர்களின் வீட்டின் அருகில் வரிப்பண இல. 16/1 | 28<br>16/5<br>16/1 | 16<br>16/7<br>16/1 | 120m | 3.03m |
| | | **வலது** எம். டி. எல். ரென்டோல் அவர்களின் வீட்டின் அருகில் வரிப்பண இல. 16 | **வலது** பியசிறி விதாரண அவர்களின் வீட்டின் அருகில் வரிப்பண இல. 16/1 | | | | |

09 - 161

# நானாவித அறிவித்தல்கள்

## எஹெலியகொட பிரதேச சபை

*மதிப்பீட்டு வரி விதித்தல் - 2022*

*எஹெலியகொட பிரதேச சபையின் அதிகாரங்களைச் செயற்படுத்துகின்ற, அதேபோன்று பணிகள் மற்றும் கடமைகளை நிறைவேற்றுகின்ற எஹெலியகொட பிரதேச சபையின் தலைவர் எம். பீ. திலக் ரோஹன ஜயவிக்ரம ஆகிய நான், 1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டத்தின் 9 ஆம் பிரிவின் (3) ஆம் பிரிவுடன் வாசிக்க வேண்டிய அச்சட்டத்தின் 134 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம் எஹெலியகொட பிரதேச சபையின் அதிகாரப் பிரதேசத்திற்காக 2022 ஆம் ஆண்டு தொடர்பில் மதிப்பீட்டுவரி விதிப்பு கீழ்க் குறிப்பிடப்பட்டுள்ளவாறாக இருத்தல் வேண்டுமென நான் தீர்மானிக்கின்றேன். அதாவது:*

*1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டத்தின் 146 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் கீழ் எஹெலியகொட பிரதேச சபையிடம் அளிக்கப்பட்டுள்ள அதிகாரங்களின் பிரகாரம் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் 1524 இலக்கமும் 2007.11.16 ஆம் திகதியுமுடைய வர்த்தமானப் பத்திரிகையின் கீழும் அத்துடன் இலக்கமும் 1617 ஆம் இலக்கமும் 2009.08.28 ஆம் திகதியுமுடைய வர்த்தமானப் பத்திரிகையின் கீழும் பிரதேச சபையின் அதிகாரப் பிரதேசத்தில் முன்னேற்றம் செய்யப்பட்ட பிரதேசங்கள் என பிரகடனப்படுத்தப்பட்டுள்ள அதிகாரப் பிரதேசத்திற்குள் அமைந்துள்ள வீடுகள், கட்டிடங்கள், காணிகள் மற்றும் வரிசை வீடுகள் ஆகியவற்றின் வருடாந்தப் பெறுமதி தொடர்பில் 2021 ஆம் ஆண்டிற்கான மதிப்பீடு 2022 ஆண்டிற்கான மதிப்பீடாக அங்கீகரிக்கப்பட வேண்டும் எனவும் அம்மதிப்பீட்டின்படி 1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டத்தின் 9 ஆம் பிரிவின் 3 ஆம் உபபிரிவுடன் வாசிக்க வேண்டிய அச்சட்டத்தின் 134 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவினால் எனக்களிக்கப்பட்டுள்ள அதிகாரங்களின் பிரகாரம் மேற்கூறிய ஆதனங்கள் தொடர்பில் மேற்கூறிய மதிப்பீட்டிற்கான வருடாந்தப் பெறுமதியின் நூற்றுக்குப் பத்து (10%) வருடாந்த மதிப்பீட்டுவரி விதிக்கப்பட வேண்டும் எனவும்,*

*மேலும் 2022 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 31, யூன் மாதம் 30, செப்தெம்பர் மாதம் 30 மற்றும் திசெம்பர் மாதம் 31 ஆந் திகதிகளுக்கு முன் அவ்வாறு விதிக்கப்பட்ட வருடாந்த மதிப்பீட்டு வரி எஹெலியகொட பிரதேச சபையின் நிதியத்திற்குச் செலுத்தப்படல் வேண்டும் எனவும் அவ்வாறு வருடாந்த மதிப்பீட்டு வரி 2022 ஆம் ஆண்டு சனவரி மாதம் 31 ஆந் திகதியில் அல்லது அதற்குமுன் செலுத்தப்படுமாயின் வருடாந்த மதிப்பீட்டு வரித்தொகையின் நூற்றுக்குப் பத்து வீத (10%) கழிவும் காலாண்டுகள் அடிப்படையில் ஏற்புடைய மதிப்பீட்டு வரிப் பணத்தொகை பிரதேச சபையின் நிதியத்திற்குச் செலுத்தப்படுமாயின் மேற்கூறிய காலாண்டின் முதல் மாதத்தில் ஏற்புடைய பணத்தொகையின் நூற்றுக்கு ஐந்து வீத (5%) கழிவும் எஹெலியகொட பிரதேச சபையினால் பெற்றுக் கொடுக்கப்பட வேண்டும் எனவும் தீர்மானிக்கின்றேன்.*

*எம். பீ. திலக் ரோஹண ஜயவிக்ரம,*
*தலைவர்,*
*எஹெலியகொட பிரதேச சபை.*

*பிரதேச சபை அலுவலகம்,*
*எஹெலியகொட.*
*2021, ஒகத்து 10.*

*09 - 98/1*

---

## எஹெலியகொட பிரதேச சபை

*ஏக்கர் வரி விதித்தல் - 2022*

*எஹெலியகொட பிரதேச சபையின் அதிகாரங்களைச் செயற்படுத்துகின்ற அதேபோன்று பணிகள் மற்றும் கடமைகளை நிறைவேற்றுகின்ற எஹெலியகொட பிரதேச சபையின் தலைவர் எம். பீ. திலக் ரோஹன ஜயவிக்ரம ஆகிய நான், 1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டத்தின் 9 ஆம் பிரிவின் (3) ஆம் உட்பிரிவுடன் வாசிக்க வேண்டிய அச்சட்டத்தின் 134 ஆம் பிரிவின் (3) ஆம் பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம், அவ் ஏற்பாடுகளுக்கு அமைய உள்ளூராட்சி விடயங்களுக்குப் பொறுப்பான அமைச்சரினால் ஏக்கர் வரி விதிக்கப்படுதல் மற்றும் அறவிடப்படுதல் ஆகிய பணிகளுக்காக விசேட பிரதேசமொன்றாகக் கருதப்படுகின்றமை தொடர்பாக 544(iv) இலக்கமும் 1989.02.03 ஆம் திகதியுடைய வர்த்தமானப் பத்திரிகையில் பரசுரிக்கப்பட்டுள்ள விதிக்கு உட்பட்ட எஹெலியகொட பிரதேச சபையின் அதிகாரப் பிரதேசத்தில் அமைந்துள்ள நிரந்தர அல்லது தொடர்ச்சியாக விவசாய நடவடிக்கையொன்றின் கீழ் உள்ள ஒரு ஹெக்டயாருக்கு மேற்பட்ட ஆனால் ஐந்து ஹெக்டயார்களுக்குக் குறைந்த நிரந்தர*

அல்லது தொடர்ச்சியாக விவசாய நடவடிக்கைகளில் பயன்படுத்தும் ஒவ்வொரு காணி தொடர்பிலும் அக்காணியின் ஒவ்வொரு ஹெக்டயாருக்காகவும் 2022 ஆம் ஆண்டிற்காக 50 ரூபா வீதமான வருடாந்த ஏக்கர் வரியொன்றை விதித்து அறவிடுவதற்கும் தீர்மானிக்கின்றேன். அக்காணி 5 ஹெக்டயாருக்கு அல்லது அதற்கு மேற்படும் சந்தர்ப்பத்தில் மேற்படும் ஒவ்வொரு ஹெக்டயாருக்கும் 2022 ஆம் ஆண்டிற்காக 10 ரூபா வீதமான வருடாந்த ஏக்கர் வரி ஒன்றை விதித்து அறவிடுவதற்கு நான் தீர்மானிக்கின்றேன்.

2021 ஆம் ஆண்டில் ஏக்கர் வரி தொடர்பாக அடிப்படையாகக் கொண்ட சரிபார்த்தலானது, 2022 ஆம் ஆண்டு தொடர்பான சரிபார்த்தலாகவும் ஏற்றுக் கொள்வதற்கும் மேலும் 2022 ஆம் ஆண்டில் பின்வரும் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள ஒவ்வொரு காலாண்டு தொடர்பிலும் அதற்கு நேரெதிரே குறிப்பிடப்பட்டுள்ள திகதிக்கு முன் அவ்வாறு விதிக்கப்பட்ட வருடாந்த ஏக்கர் வரி எஹெலியகொட பிரதேச சபையின் நிதியத்திற்குச் செலுத்த வேண்டுமெனவும் அவ்வாறு வருடாந்த ஏக்கர் வரி 2022 ஆம் ஆண்டு சனவரி மாதம் 31 ஆந் திகதி அல்லது அதற்குமுன் செலுத்தப்படுமாயின் வருடாந்த ஏக்கர் வரித்தொகையின் நூற்றுக்குப் பத்துவீத (10%) கழிவும், அந்த அட்டவணையில் ஒவ்வொரு காலாண்டின் முன்பாக நான்காம் நிரலில் குறிப்பிடப்பட்டுள்ள திகதிக்கு முன் ஏற்புடைய ஏக்கர் வரித்தொகை எஹெலியகொட பிரதேச சபையின் நிதியத்திற்குச் செலுத்தப்படுமாயின் ஒரு காலாண்டிற்கு 5% கழிவும் எஹெலியகொட பிரதேச சபையினால் வழங்கப்பட வேண்டும் எனவும் 1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டத்தின் 9 ஆம் பிரிவின் 3 ஆம் உட்பிரிவின் பிரகாரம் நான் தீர்மானிக்கின்றேன்.

எம். பீ. திலக் ரோஹண ஜயவிக்ரம,
தலைவர்,
எஹெலியகொட பிரதேச சபை.

பிரதேச சபை அலுவலகம்,
எஹெலியகொட.
2021, ஓகத்து 10.

**அட்டவணை**

| காலாண்டு | செலுத்தப்பட வேண்டிய திகதி | 10% கழிவுக்காக உரிமை பெறும் இறுதித் திகதி | 5% கழிவுக்காக உரிமை பெறும் இறுதித் திகதி |
|---|---|---|---|
| முதலாம் காலாண்டு | மாச்சு மாதம் 31 | சனவரி மாதம் 31 | சனவரி மாதம் 31 |
| இரண்டாம் காலாண்டு | யூன் மாதம் 30 | | ஏப்பிறல் மாதம் 30 |
| மூன்றாம் காலாண்டு | செத்தெம்பர் மாதம் 30 | | யூலை மாதம் 31 |
| நான்காம் காலாண்டு | திசெம்பர் மாதம் 31 | | ஒற்றோபர் மாதம் 31 |

10 - 98/2

---

**எஹெலியகொட பிரதேச சபை**

வாகனங்கள் மற்றும் விலங்குகள் தொடர்பில் வரி விதித்தல் - 2022

எஹெலியகொட பிரதேச சபையின் அதிகாரங்களைச் செயற்படுத்துகின்ற, அதேபோன்று பணிகள் மற்றும் கடமைகளை நிறைவேற்றுகின்ற எஹெலியகொட பிரதேச சபையின் தலைவர் எம். பீ. திலக் ரோஹன ஜயவிக்ரம ஆகிய நான், 1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டத்தின் 9 ஆம் பிரிவின் 3 ஆம் உட்பிரிவுடன் வாசிக்க வேண்டிய 147 மற்றும் 148 ஆகிய பிரிவுகளின் ஏற்பாடுகளின் பிரகாரம் வாகனங்கள் மற்றும் விலங்குகள் தொடர்பாக ஆண்டு வரியொன்று கீழ்க்காணும்

அட்டவணைப்படி எஹெலியகொட பிரதேச சபையின் அதிகாரப் பிரதேசத்திற்காக 2022 ஆம் ஆண்டு தொடர்பில் விதித்து அறவிட்டுக் கொள்வதற்கு தீர்மானிக்கின்றேன்.

எம். பீ. திலக் ரோஹண ஜயவிக்ரம,
தலைவர்,
எஹெலியகொட பிரதேச சபை.

பிரதேச சபை அலுவலகம்,
எஹெலியகொட.
2021, ஓகத்து 10.

**அட்டவணை**

| | | ரூபா. சதம் |
|---|---|---|
| மோட்டார் வண்டி, மோட்டார் கார், மோட்டார் லொரி, மோட்டார் சைக்கிள், மாட்டு வண்டி, ஜின் ரிக்ஷோ வண்டி, சைக்கிள் வண்டி அல்லது டிரைசிகிள் வண்டியொன்று அல்லாத எல்லா வாகனங்களுக்கும் | | 25.00 |

ஒவ்வொரு சைக்கிள் அல்லது டிரைசிகிள் அல்லது சைக்கிள் கார் அல்லது மாட்டு வண்டிக்காக

| | | |
|---|---|---|
| (அ) | வியாபார நோக்கமாக உபயோகிக்கப்படுமாயின் | 18.00 |
| (ஆ) | வியாபார நோக்கமாக அல்லாத ஏனைய விவகாரங்களில் உபயோகிக்கப்படுமாயின் | 4.00 |
| | ஒவ்வொரு மாட்டு வண்டிக்காகவும் | 20.00 |
| | ஒவ்வொரு கை வண்டிக்காகவும் | 10.00 |
| | ஒவ்வொரு ரிக்ஷோ வண்டிக்காகவும் | 7.50 |
| | ஒவ்வொரு குதிரை, மட்டக் குதிரை அல்லது கழுதைக்காகவும் | 15.00 |
| | ஒவ்வொரு யானைக்காகவும் | 50.00 |

26 அங்குலங்களுக்கு மேற்படாத விட்டமுடைய சக்கரங்களைக் கொண்ட சிறுவர் வாகனங்கள், வீல்பெரோக்கள், அனேகமாக பிரத்தியேகமான இடங்களில் மாத்திரம் வியாபார நோக்கமாக உபயோகிக்கும் கை வண்டிகள் மற்றும் வியாபார நோக்கமாக உபயோகிக்காத கை வண்டிகள் இந்த வரி விதிப்பிலிருந்து விடுவிக்கப்படும்.

இந்த அட்டவணையில் "வியாபார நோக்க" என்பதற்கு விற்பனைக்காக அல்லது ஏனையவொரு முறையில் ஏதாவதொரு வியாபார தொழில் முயற்சி அல்லது கைத்தொழிலுக்கான எவையேனும் பொருட்களை அல்லது எவையேனும் எழுத்து மூலமான அச்சிடப்பட்ட பொருட்களை ஏற்றிச் செல்லுதலும் உட்படும்.

09-98/3

---

**எஹெலியகொட பிரதேச சபை**

அனுமதிப்பத்திரங்களுக்கான கட்டணம் விதித்தல் - 2022

எஹெலியகொட பிரதேச சபையின் தலைவர் எம். பீ. திலக் ரோஹன ஜயவிக்ரம ஆகிய நான், 1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டத்தின் 9 ஆம் பிரிவின் (3) ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்க வேண்டிய 147 மற்றும் 149 ஆம் பிரிவுகளால் எனக்கு அளிக்கப்பட்டுள்ள அதிகாரங்களின் பிரகாரம் எஹெலியகொட பிரதேச சபையின் அதிகார பிரதேசத்திற்காக 2022 ஆம்

ஆண்டு தொடர்பில் அனுமதிப் பத்திரங்களுக்காக கீழ்க்காணும் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு கட்டணம் விதிக்கப்பட வேண்டுமென இத்தால் தீர்மானிக்கின்றேன்.

1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டத்தின் 9 ஆம் பிரிவின் 3 ஆம் உட்பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 147 மற்றும் 149 ஆம் பிரிவுகளின் கீழ் எனக்களிக்கப்பட்டுள்ள அதிகாரங்களின் பிரகாரம் அச்சட்டத்தின் 2152/37 இலக்கமும் 2019.12.05 ஆம் திகதியும் கொண்ட அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் குறிப்பிடப்பட்டுள்ளதன் பிரகாரம் பொதுமக்களின் சுகாதாரத்திற்கு ஒப்புடையதான, வருடாந்த அனுமதிப்பத்திரம் ஒன்று பெற்றுக்கொள்ள வேண்டிய, இங்கு கீழ்க்காணும் பட்டியல் இல.01, பட்டியல் இலக்கம் 02, பட்டியல் இலக்கம் 03, பட்டியல் இலக்கம் 04 இல் குறிப்பிடப்பட்டுள்ள ஏதேனும் ஒரு வியாபாரம் அல்லது கைத்தொழில் ஒன்றிற்காக பயன்படுத்தப்படும் இடம் அல்லது மனையிடம் ஒன்றை பயன்படுத்துவதற்கு அனுமதி அளித்து, அவ்விடம் அல்லது மனையிடத்தின் வருடாந்த பெறுமதியின் பிரகாரம், கீழ்க்காணும் அட்டவணை I இல் நேரொத்த குறிப்பில் குறிப்பிடப்பட்டுள்ள அனுமதிப்பத்திர கட்டணமொன்று 2022 ஆம் ஆண்டிற்காக விதிக்கப்பட வேண்டும் எனவும்,

மேலும் மேற்கூறிய இடம் ஒன்றில் அல்லது சுற்றாடல் ஒன்றில்1968 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க உல்லாசப் பிரயாணத்துறைச் சபைச் சட்டத்தின் பணிகளுக்காக உல்லாசப் பிரயாணத்துறைச் சபையில் அனுமதி அளிக்கப்பட்டுள்ள, அங்கீகரிக்கப்பட்டுள்ள ஹோட்டல் ஒன்றாக, சிற்றுண்டிச்சாலை ஒன்றாக, தங்குமிட வசதியளிக்குமிடம் ஒன்றாக ஆகும்போது அதற்கு ஏற்புடைய அனுமதிப் பத்திரங்களைப் பெற்றுக் கொடுக்கும்போது அவ்விடம் அல்லது அச்சுற்றாடல் தொடர்பில் 2021 ஆம் ஆண்டில் பெற்ற பெறுகைகளிலில் இருந்து 1% அனுமதிப்பத்திரக் கட்டணமொன்றாக 2022 ஆம் ஆண்டு தொடர்பில் விதிக்கப்பட வேண்டும் எனவும் நான் தீர்மானிக்கின்றேன்.

எம். பீ. திலக் ரோஹண ஜயவிக்ரம,
தலைவர்,
எஹெலியகொட பிரதேச சபை.

பிரதேச சபை அலுவலகம்,
எஹெலியகொட.
2021, ஓகத்து 10.

**அட்டவணை 01**

| I ஆம் நிரல் | II ஆம் நிரல் |
|---|---|
| சுற்றாடலின் வருடாந்த பெறுமதி 750.00 ரூபாவிற்கு மேற்படாத சந்தர்ப்பம் என்றால் | ரூ. 500.00 |
| சுற்றாடலின் வருடாந்த பெறுமதி 750.00 ரூபாவிற்கு மேற்பட்ட 1500.00 ரூபாவிற்கு மேற்படாத சந்தர்ப்பம் என்றால் | ரூ. 750.00 |
| சுற்றாடலின் வருடாந்த பெறுமதி 1500.00 ரூபாவிற்கு மேற்படும் சந்தர்ப்பம் என்றால் | ரூ. 1000.00 |

**பட்டியல் இலக்கம் 01**

*வெறுப்பான தொழில் முயற்சிகள் அல்லது கைத்தொழில்கள்*

01. காரீயம் துப்பரவு செய்தல் அல்லது களஞ்சியப்படுத்தி வைத்தல்
02. உர வகைகள் அல்லது இரசாயன உர வகைகள் உற்பத்தி செய்தல் அல்லது விற்பனைக்காக வைத்திருத்தல்
03. தோல் பொருட்கள் பதனிடுதல்
04. இறப்பர் உற்பத்தி செய்தல் அல்லது இறப்பர் சீட் வைத்திருத்தல்
05. இறப்பர் பொருட்கள் உற்பத்தி செய்தல்
06. ஒட்டுப்பால் போன்றவற்றை களஞ்சியப்படுத்தி வைத்தல் அல்லது விற்பனை செய்தல்
07. சிரட்டைக் கரி அல்லது மரக்கட்டைக் கரி உற்பத்தி செய்தல்

08. விலங்கு உணவு உற்பத்தி செய்தல்
09. சவர்க்காரம் உற்பத்தி செய்தல்
10. புதிய உலோகங்கள் மற்றும் பழைய உலோகங்களை கொள்வனபு செய்தல்அல்லது களஞ்சியப்படுத்தி வைத்தல்
11. உலோகக் கழிவுகள் அல்லது உடைந்த துண்டுகள் கொள்வனவு செய்தல் அல்லது களஞ்சியப்படுத்தி வைத்தல்
12. தளபாடப் பொருட்களை உற்பத்தி செய்தல் அல்லது பளபளப்பாக்குதல் (பொலிஸ் பண்ணுதல்)
13. பிரம்புப் பொருட்களை உற்பத்தி செய்தல்
14. தச்சு வேலைத் தொழிற்சாலையொன்றை நடத்திச் செல்லல்
15. தேங்காய் மட்டை ஊற வைத்தல் (பதனிடுதல்)
16. தூரிகை வகைகளை உற்பத்தி செய்தல் (பற்தூரிகைகள் தவிர்ந்த)
17. இயந்திரங்கள் மூலமாக மரங்களை அரிதல்
18. மை வகைகள், வார்னிஸ் வகைகள் அல்லது டிஸ்டெம்பர் உற்பத்தி செய்தல்
19. நார்களுக்கு நிறமூட்டுதல்
20. தோல் பொருட்களை உற்பத்தி செய்தல்
21. இரசாயன பொருட்கள் உற்பத்தி செய்தல் அல்லது மீள் பொதி செய்தல்
22. கேஸ் மென்டல்கள் உற்பத்தி செய்தல்
23. பொட்டி உற்பத்தி செய்தல்
24. மெழுகுவர்த்திகள் உற்பத்தி செய்தல்
25. கற்பூர வகைகள் உற்பத்தி செய்தல்
26. எழுதும் மை, அச்சிடும் மை, ஸ்டென்சில் மை என்பன உற்பத்தி செய்தல்
27. துணி துவைக்கப் பயன்படுத்தும் நீலம் உற்பத்தி செய்தல்
28. அரக்கு உற்பத்தி செய்தல்
29. வாசனைத் திரவியங்களை உற்பத்தி செய்தல்
30. பாடசாலை வெண்கட்டி உற்பத்தி செய்தல்
31. டயர் அல்லது டியுப் வகைகளை உற்பத்தி செய்தல்
32. டயர் வகைகளை மீள் நிரப்பம் செய்தல்
33. பாற் பண்ணைகள் அல்லது பால் விற்பனை செய்தல்
34. சீமெந்து களஞ்சியப்படுத்தி வைத்தல், அஸ்பெஸ்டஸ் களஞ்சியப்படுத்தி வைத்தல்
35. சீமெந்துப் பொருட்கள் அல்லது அஸ்பெஸ்டஸ் களஞ்சியப்படுத்தி வைத்தல்
36. மணல் கடதாசி வகைகள் உற்பத்தி செய்தல்
37. பிளாஸ்டிக் பொருட்கள் உற்பத்தி செய்தல் அல்லது களஞ்சியப்படுத்தி வைத்தல்
38. செங்கற்கள் சுடுதல் அல்லது விற்பனை செய்தல்
39. இயந்திரங்கள் மூலமாக துணி நெய்தல்
40. ஓடுகள் உற்பத்தி செய்தல் மற்றும் விற்பனை செய்தல்
41. பாவனை செய்யப்பட்ட சாக்குகள், கொல்கலன்கள் (பெரல்கள்) மற்றும் பாத்திரங்கள் சுத்தம் செய்து விற்பனை செய்தல்
42. இயந்திரங்கள் மூலமாக சீமெந்து புளொக் கற்கள் உற்பத்தி செய்தல்
43. கருவப்பட்டை, ஏலம் போன்றவற்றை காயவைத்து தயார் படுத்தல் மற்றும் களஞ்சியப்படுத்தி வைத்தல்
44. பசை (கம்) வகைகள் உற்பத்தி செய்தல் அல்லது விற்பனை செய்தல்
45. கிருமிநாசினி வகைகள் உற்பத்தி செய்தல் அல்லது விற்பனை செய்தல்
46. மின்கலங்கள் (பற்றரிகள்) நிரப்பு செய்தல் அல்லது களஞ்சியப்படுத்தி வைக்கும் நிலையம் ஒன்றை நடாத்திச் செல்லல்
47. பழைய போத்தல்கள் சேகரிக்கும் நிலையம் ஒன்றை நடாத்திச் செல்லல்
48. மரணச்சடங்குகளுக்கான ஏற்பாட்டுச் சேவைகளை வழங்கும் நிறுவனமொன்றை நடத்திச் செல்லல்
49. வீட்டுத் தளபாடங்கள் உற்பத்தி செய்தல் மற்றும் கஞ்சியப்படுத்தி வைத்தல்
50. மாணிக்கக் கற்கள் வெட்டுதல் மற்றும் ஒப்பமிடுதல்
51. பிரம்புப் பொருட்களை உற்பத்தி செய்தல் மற்றும் விற்பனை செய்தல்
52. இயந்திரங்கள் மூலமாக துணி நெய்யும் தொழிற்சாலையொன்றை நடத்திச் செல்லல்
53. மா அல்லது மசாலா பொருட்கள் அரைக்கும் ஆலை ஒன்றை நடத்திச் செல்லல்

54. விலங்கு உணவுகள் களஞ்சியப்படுத்தி வைத்தல்
55. தானிய வகைகள் களஞ்சியப்படுத்தி வைத்தல்
56. பொலித்தீன் வகைகள் அல்லது அதனுடன் தொடர்புபட்ட உற்பத்திகள் உற்பத்தி செய்தல் அல்லது விற்பனை செய்தல்
57. சப்பாத்துகள் உற்பத்தி செய்தல் மற்றும் விற்பனை செய்தல்
58. மெழுகுவர்த்திகள் உற்பத்தி செய்தல் மற்றும் விற்பனை செய்தல்
59. வேறு ஏதேனும் வெறுப்பான தொழில் முயற்சிகள் அல்லது கைத்தொழில்கள்
60. விலங்கு வேளாண்மை
61. காளான் உற்பத்தி செய்தல்
62. துணி துண்டுகள் விற்பனை செய்தல்
63. இனிப்பு வகைகள் உற்பத்தி செய்தல்
64. சிரப் வகைகள், பழப் பானங்கள் உற்பத்தி செய்தல்
65. வெதுப்பகங்கள் (பேக்கரிகள்)

**பட்டியல் இலக்கம் 02**

*அபாயகரமான தொழில் முயற்சிகள் அல்லது கைத்தொழில்கள்*

01. இயந்திரங்கள் மூலமாக மரங்களை அரிதல்
02. கொப்பரா உற்பத்தி செய்தல் அல்லது களஞ்சியப்படுத்தி வைத்தல்
03. இயந்திரங்கள் மூலமாக தேங்காய் எண்ணெய் அல்லது வேறு ஏதேனும் எண்ணெய் வகைகளை உற்பத்தி செய்தல் அல்லது களஞ்சியப்படுத்தி வைத்தல்
04. பஞ்சு களஞ்சியப்படுத்தி வைத்தல் மற்றும் அதனுடன் தொடர்புபட்ட உற்பத்திகளை தயார்படுத்தி விற்பனை செய்தல்
05. தீப்பெட்டி வகைகள் உற்பத்தி செய்தல் அல்லது களஞ்சியப்படுத்தி வைத்தல்
06. மெதிலேடட் ஸ்பிறிட் உற்பத்தி செய்தல்
07. தென்னை நார் அல்லது வேறு வகையாக நார் வகைகள் உற்பத்தி செய்தல்
08. தென்னை நார் அல்லது வேறு வகையாக நார் வகைகளைப் பயன்படுத்தி பொருட்கள் உற்பத்தி செய்தல்
09. பாவிக்கப்பட்ட ஆடை வகைகள் களஞ்சியப்படுத்தி வைத்தல்
10. தங்க நகைகளை உற்பத்தி செய்தல் மற்றும் பழுதுபார்த்தல்
11. இயந்திரங்கள் மூலமாக மரப் பலகைகள் அரிதல்
12. விறகு விற்பனை செய்தல்
13. ஓடு வகைகள் மற்றும் செங்கல் வகைகள் களஞ்சியப்படுத்தி வைத்தல் மற்றும் விற்பனை செய்தல்
14. வாகன டயர்கள் மற்றும் டியுப்கள் விற்பனை செய்வதற்காக களஞ்சியப்படுத்தி வைத்தல்
15. மரம் சார்ந்த பலகை வகைகள் உற்பத்தி செய்தல் மற்றும் மரத்தூள் சார்ந்த உற்பத்தி வகைகள்
16. கார்ட்போட் மற்றும் கடதாசி பயன்படுத்தி செய்யப்படும் உற்பத்திகள் களஞ்சியப்படுத்தி வைத்தல் மற்றும் விற்பனை செய்தல்
17. கருங்கல் மற்றும் கற் துண்டுகளை பயன்படுத்தி மேற்கொள்ளப்படும் கைத்தொழில்கள்
18. களிமண் மற்றும் களிமண் பயன்படுத்தி மேற்கொள்ளப்படும் கைத்தொழில்கள்
19. தயாரிக்கப்பட்ட ஆடைகள் உற்பத்தி செய்யும் கைத்தொழில்கள்
20. இரசாயனப் பொருட்கள் சார்ந்த துணி வகைகள் உற்பத்தி செய்யும் கைத்தொழில்கள்
21. ஆடை சலவைத் தொழில் செய்யும் இடங்கள்
22. பீடி வகைகள் உற்பத்தி செய்தல் மற்றும் களஞ்சியப்படுத்தி வைத்தல்
23. வாகனங்களை பழுதுபார்த்து நிறப்பூச்சுக்கள் பூசும் இடம் ஒன்றை நடாத்திச் செல்லல்
24. வாகனங்களின் உடற் பாகங்கள் பழுதுபார்த்து நிறப்பூச்சுக்கள் பூசும் நிறுவனம் ஒன்றை நடாத்திச் செல்லல்
25. வாகனங்களை சீராக்கம் (சர்விஸ்) செய்யும் நிறுவனம் ஒன்றை நடாத்திச் செல்லல்
26. அச்சகம் ஒன்றை நடாத்திச் செல்லல்
27. பழைய பத்திரிகைகள் அல்லது கடதாசிகள் சேகரிக்கும் நிலையம் ஒன்றை நடாத்திச் செல்லல்

28. சைக்கிள்கள், மோட்டார் சைக்கிள்கள் மற்றும் மோட்டார் வாகனங்களை பழுதுபார்த்தல்
29. விசிறிகளுக்கு நிறப்பூச்சு பூசுதல்
30. வான வேடிக்கைகள் மற்றும் பட்டாசு வகைகள் உற்பத்தி செய்தல் மற்றும் களஞ்சியப்படுத்தி வைத்தல்
31. உலோக கலாச்சார தொழில் முயற்சிகள் இயந்திரங்கள் மற்றும் ஆயுதங்கள் மற்றும் உபகரணங்களை உற்பத்தி செய்தல்
32. வேறு ஏதேனும் அபாயகரமான தொழில் முயற்சிகள் அல்லது கைத்தொழில்கள்
33. எரிபொருள் நிரப்பு நிலையங்கள்

**பட்டியல் இலக்கம் 03**

*அபாயகரமான மற்றும் வெறுப்பான தொழில் முயற்சிகள் அல்லது கைத்தொழில்கள்*

01. டிரை கிளினிங் செய்தல் அல்லது துணி வகைகளுக்கு சாயமூட்டுதல்
02. துணி வகைகளை அச்சுப் பிரதி செய்தல் அல்லது துணி வகைகளுக்கு சாயமூட்டுதல் அல்லது பதிக் வேலை செய்தல்
03. மின்சாரம் பயன்படுத்தி உலோகங்களுக்கு பூச்சுக்கள் பூசுதல்
04. குளிர்சாதனப் பெட்டிகள் திருத்தும் நிறுவனம் ஒன்றை நடாத்திச் செல்லல்
05. எண்ணெய் அல்லது விலங்குக் கொழுப்புக்கள் உற்பத்தி செய்தல்
06. சுண்ணாம்புக் கற்கள் அல்லது வெளிச்சாங் கற்களை சுடுதல்
07. வான வெடில்கள் அல்லது பட்டாசு வகைகள் உற்பத்தி செய்தல்
08. பயிபர் பொருட்கள் உற்பத்தி செய்தல்
09. மின்கலங்கள் (பற்றரிகள்) மின்னேற்றம் செய்தல் அல்லது பழுதுபார்த்தல்
10. உலோக வகைகள் ஒட்ட வைத்தல்
11. இயந்திரங்கள் மூலம் உலோக வகைகள் தூளாக்குதல்
12. வார்ப்பு வேலை வேலைத்தளம் ஒன்றை நடாத்திச் செல்லல்
13. தகர வேலை வேலைத்தளம் ஒன்றை நடாத்திச் செல்லல்
14. மோட்டார் வாகனங்களின் உடல் அமைப்புக்கள் செய்தல்
15. கிருமிநாசினிகள், பங்கஸ் நசினிகள், செடிநாசினிகள் மற்றும் பூச்சிக்கொல்லிகள் உற்பத்தி செய்தல் அல்லது மீள் நிரப்பு செய்தல்
16. கிருமிநாசினிகள் உற்பத்தி செய்தல் மற்றும் நுளம்புச் சுருள்கள் உற்பத்தி செய்தல்
17. மரப் பலகைகள் பாதுகாக்கும் பூச்சுக்கள் உற்பத்தி செய்தல்
18. தாரிடப்பட்ட கற்கள் மற்றும் சீமெந்துடன் தொடர்புபட்ட முன் கட்டுமான பொருட்கள் உற்பத்தி செய்யும் நிறுவனம் ஒன்றை நடாத்திச் செல்லல்
19. கண்ணாடிப் பொருட்கள் உற்பத்தி செய்தல் மற்றும் களஞ்சியப்படுத்தி வைத்தல்
20. இரும்புத் தகடுகளை கல்வனைஸ் படுத்தல்
21. ஒட்டுவதற்கு பயன்படுத்தப்படும் ஈய வகைகள் உற்பத்தி செய்தல்
22. அலுமினியப் பொருட்கள் உற்பத்தி செய்தல்
23. முட்கம்பிகள் உற்பத்தி செய்தல்
24. இரும்பு ஆணி வகைகள் உற்பத்தி செய்தல்
25. காபன் கடதாசிகள் அல்லது தட்டச்சு ரிபன் உற்பத்தி செய்தல்
26. தகடினால் செய்யப்பட்ட பாத்திரங்கள், உருக்கு பீப்பாக்கள் அல்லது காபன் உற்பத்தி செய்தல்
27. ஜீ. ஐ. சீ. வாளிகள் உற்பத்தி செய்தல்
28. குளிரூட்டும் இயந்திரங்கள், குளிர்சாதனப் பெட்டிகள், மிகை குளிர்சாதனப் பெட்டிகள் உற்பத்தி செய்தல் அல்லது பழுது பார்த்தல்
29. பிரேக் லயினர்கள், கிளைச் லயினர்கள் உற்பத்தி செய்தல் மற்றும் பழுது பார்த்தல்
30. இயந்திர உபகரணங்கள் உற்பத்தி செய்தல்
31. மின்சார உபகரணங்கள் உற்பத்தி செய்தல்
32. இறப்பர் கலக்கப்பட்ட நார் வகைகள் உற்பத்தி செய்தல்

33. இணைக்கும் மின்கலங்கள் (பற்றரிகள்) உற்பத்தி செய்தல்
34. மோட்டார் வாகனங்கள் ஒன்று சேர்த்தல்
35. (கதிர்த்தி) ரேடியேட்டர் உற்பத்தி செய்தல்
36. இலத்திரனியல் உபகரணங்கள் உற்பத்தி செய்தல் மற்றும் பழுது பார்த்தல்
37. உலர் மின்கலங்கள் (பற்றரிகள்) உற்பத்தி செய்தல்
38. மின் குமிழ்கள் உற்பத்தி செய்தல் மற்றும் பழுதுபார்த்தல்
39. வேறு ஏதேனும் அபாயகரமான மற்றும் வெறுப்பான தொழில் முயற்சிகள் அல்லது கைத்தொழில்கள்

**பட்டியல் இலக்கம் 04**

*துணை விதி விதிக்கப்பட்டுள்ள தொழில் முயற்சிகள் அல்லது கைத்தொழில்கள்*

01. உணவிற்காக விலங்குகளை கொலை செய்தல் அல்லது கொலை செய்வதற்காக தடுத்து வைக்கும் இடம் ஒன்றை நடாத்திச் செல்லல்
02. உணவு வகைகளை வழங்கும் நிலையம் ஒன்றை நடாத்திச் செல்லல்
03. களியாட்ட விடுதி ஒன்றை நடாத்திச் செல்லல்
04. மரக்கறி வகைகள் அல்லது பழ வகைகள் விற்பனை செய்யும் நிலையம் ஒன்றை நடாத்திச் செல்லல்
05. கற்சுரங்கம் அல்லது கற்கள் அரைக்கும் ஆலை ஒன்றை நடாத்திச் செல்லல்
06. தேனீர், கோப்பி கடை அல்லது சிற்றுண்டிகள் விற்பனை செய்யும் நிலையம் ஒன்றை நடாத்திச் செல்லல்
07. இறைச்சி வகைகள் விற்பனை செய்யும் நிலையம் ஒன்றை நடாத்திச் செல்லல்
08. மீன் வகைகள் விற்பனை செய்யும் நிலையம் ஒன்றை நடாத்திச் செல்லல்
09. அழகுக்கலை நிலையம் ஒன்றை நடாத்திச் செல்லல்
10. தங்குமிட வசதிகள் வழங்கும் இடம் அல்லது வாடிவீடு ஒன்றை நடாத்திச் செல்லல்
11. நடமாடும் வியாபார நிலையம் ஒன்றை நடாத்திச் செல்லல்
12. சில்லறை வியாபார நிலையம் ஒன்றை நடாத்திச் செல்லல்
13. ஹோட்டல் ஒன்றை நடாத்திச் செல்லல்

09 - 98/4

---

**எஹெலியகொட பிரதேச சபை**

தொழில் முயற்சி வரி விதித்தல் - 2022

எஹெலியகொட பிரதேச சபையின் அதிகாரங்களைச் செயற்படுத்துகின்ற, அதேபோன்று பணிகள் மற்றும் கடமைகளை நிறைவேற்றுகின்ற எஹெலியகொட பிரதேச சபையின் தலைவர் எம். பீ. திலக் ரோஹன ஜயவிக்ரம ஆகிய நான், 1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டத்தின் சட்டத்தின் 9 ஆம் பிரிவின் 3 ஆம் உட்பிரிவுடன் வாசிக்க வேண்டிய அச்சட்டத்தின் 152 (1) ஆம் உட்பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம், எஹெலியகொட பிரதேச சபையின் அதிகாரப் பிரதேசத்திற்காக 2022 ஆம் ஆண்டு தொடர்பில் தொழில் முயற்சி வரி விதித்தல் கீழ்க் குறிப்பிடப்பட்டுள்ள அட்டவணையின்படி விதித்து அறவிடப்பட வேண்டுமென தீர்மானிக்கின்றேன். அதாவது :

1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டத்தின் 9 ஆம் பிரிவின் 3 ஆம் உட்பிரிவுடன் வாசிக்க வேண்டிய அச்சட்டத்தின் 152 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவினால் எஹெலியகொட பிரதேச சபையின் தலைவராகிய எனக்களிக்கப்பட்டுள்ள அதிகாரங்களின் பிரகாரம் அச்சட்டத்தின் அல்லது அதன் கீழ் ஒழுங்கு செய்யப்பட்ட துணை விதியொன்றின் ஏற்பாடுகளின் கீழ் அனுமதிப்பத்திரம் ஒன்றை பெற்றுக்கொள்ள அல்லது அச்சட்டத்தின் 150 ஆம் பிரிவின் கீழ் ஏதாவதொரு வரிப்பணத் தொகை செலுத்தத் தேவைப்படாத ஏதாவதொரு தொழில் முயற்சி எஹெலியகொட பிரதேச சபையின் அதிகாரப் பிரதேசத்திற்குள் 2022 ஆம் ஆண்டில் நடத்திச் செல்லும் எந்தவொரு நபரும் அந்த தொழில் முயற்சியின் 2021 ஆம் ஆண்டின் வருமானம் இங்கு கீழ்க் காணும் அட்டவணையில் I ஆம் நிரலில் குறிப்பிடப்பட்டுள்ள ஏதாவதொரு விடய எல்லைக்குள் இருக்கும் சந்தர்ப்பமொன்றில் அதன் II ஆம் நிரலில் நேரொத்த குறிப்பால் காட்டப்பட்டுள்ள அளவுகளின் படியான வியாபார வரிப்பணத் தொகை ஒன்று 2022 ஆம் ஆண்டிற்காக விதிக்கப்பட வேண்டுமென நான் தீர்மானிக்கின்றேன்.

1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டத்தின் 9 ஆம் பிரிவின் 3 ஆம் உட்பிரிவுடன் வாசிக்க வேண்டிய அச்சட்டத்தின் 150 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவினால் எனக்களிக்கப்பட்டுள்ள அதிகாரங்களின் பிரகாரம் எஹெலியகொட பிரதேச சபையின் அதிகாரப் பிரதேசத்திற்குள் ஏதாவதொரு சுற்றாடலில் நடத்திச் செல்லப்படுகின்ற இங்கு கீழ்க் குறிப்பிடப்பட்டுள்ள

அட்டவணையில் I ஆம் நிரலில் குறிப்பிடப்பட்டுள்ள ஒவ்வொரு கைத்தொழில் தொடர்பிலும் அந்த அட்டவணையில் II ஆம் நிரலில் நேரொத்த குறிப்பால் காட்டப்பட்டுள்ள அளவிலான கைத்தொழில் வரி 2022 ஆம் ஆண்டிற்காக விதிக்கப்பட வேண்டுமென நான் தீர்மானிக்கின்றேன்.

எம். பீ. திலக் ரோஹண ஜயவிக்ரம,
தலைவர்,
எஹெலியகொட பிரதேச சபை.

பிரதேச சபை அலுவலகம்,
எஹெலியகொட.
2021, ஒகத்து 10.

**அட்டவணை 1**

| நிரல் I | | நிரல் II | | |
|---|---|---|---|---|
| தொ. இல. | வியாபாரம் அல்லது தொழில் விபரம் | தொழில் நடாத்தப்படும் ஆதனத்தின் பெறுமதி (வருடாந்த மதிப்பீடு) | | |
